Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 14/2016 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW7 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | சுந்தரராஜ், உதவி ஆய்வாளர் |
| Father's Name | – | த/பெ. கோவிந்தன் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 10$^{th}$ April 2026.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused produced. Accused counsel Mrs. J. Vanitha present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது கோட்டூர் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் பணியாற்றிய தலைமைக் காவலர் திரு.ஜெகதீஷ் அவர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். கடந்த 06.11.2025 ம் தேதி 11.00 மணிக்கு தலைமைக் காவலர் திரு.ஜெகதீஷ் அவர்கள் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது, திருமலைச்சாமி மனைவி கௌசல்யா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலையக்குற்ற எண்.323/2025, சட்டப்பிரிவுகள் 296(பி), 115(2), 118(1), 351(3) BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த புகார் **அ.சா.ஆ. 7** மற்றும் முதல் தகவலறிக்கை **அசாஆ.8** ஆகும். பின்னர் வாதியின் புகாரை இணைத்து முதல் தகவலறிக்கையின் அசலை கனம் நீதித்துறை நடுவர் எண்.2, பொள்ளாச்சிக்கும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

பின்னர் வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை நான் புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டு, அன்றைய தினமே மதியம் 12.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் நீலாமணி மற்றும் ஜெயலட்சுமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவைகள் முறையே பார்வை மகஜர் **அசாஆ.,9** மாதிரி வரைபடம் **அசாஆ.10** ஆகும்.

பின்னர் 13.15 மணிக்கு சாட்சி அடையாளம் காட்டிய சம்பவயிடத்தில் கிடந்த இரும்பு கம்பி ஒன்றை மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.11** ஆகும். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் வழக்கில் காயம்பட்ட கௌசல்யா என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் சூர்யா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், அவர் வழங்கிய காயச்சான்றிதழை பெற்றேன்.

பின்னர் இவ்வழக்கின் எதிரியை தேடி சென்றபோது, எதிரி சமத்தூர் பேருந்து நிறுத்தத்தின் அருகே நின்றிருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 14.50 மணிக்கு போலிஸ் பார்ட்டிகளுடன் அங்கு சென்று பேருந்து நிறுத்தத்தின் அருகில் நின்றிருந்த எதிரியை பிடித்து விசாரிக்க தனது பெயர் திருமலைச்சாமி, த/பெ. துரைசாமி மற்றும் விலாசத்தை கூறி பின்னர் அவரது குற்றத்தை கூறி ஒப்புக்கொண்டவரை அதே இடத்தில் வைத்து 15.00 மணிக்கு கைது செய்தேன்.

பின்னர் எதிரியுடன் புறப்பட்டு 15.30 மணிக்கு நிலையம் வந்து எதிரிக்கு திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் கைப்பற்றப்பட்ட

வழக்குச் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.** 12 ஆகும்.

பின்னர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக் காவலர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகளுக்கெதிராக மேற்படி பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், பார்வை மகஜர், மாதிரி வரைபடம், கைப்பற்றுதல் மகஜர் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும் சம்பவ இடத்திற்கே போகாமல் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளின் மீது தவறுதலாக குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளது என்றாலும், எதிரிகளுக்கும் கைப்பற்றப்பட்ட பொருளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No.II,
Pollachi